# தமிழர் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியை சந்தித்து டிக்ஸிற் வேண்டுகோள்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 19-7-86 சனி (ஆடி 3 துல்க 11) முழக்கம் 165

## புதுடில்லி பலத்த கண்டனம்

தமிழர்கள் மீண்டும் அநியாயமாகப் படுகொலை செய்யப்படுவதற்கு இந்தியா தனது கடுமையான ஆட்சேபனையையும், ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துள்ளது. இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு ஜே. என். டிக்ஸிற் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து இந்திய அரசின் மன நிலையைத் தெரியப்படுத்தினர். தமிழர் பிரதிநிதிகளின் தலைவர்களுடன் அரசியல் தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஆயுதப்படைகள் மேற்கொண்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் எந்த வகையிலும் பேச்சுவார்த்தைக்கு உதவி அளிக்காது என்று திரு. டிக்ஸிற் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதுடில்லி வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை வன்மையாகக் கண்டித்துள்ளது. மூதூரில் அறுபதுக்கும் அதிகமான தமிழர்களும், நெடுங்கேணியில் பஸ்ஸில் சென்ற தமிழர்களும் கொல்லப்பட்டிருப்பதையும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

★ நேற்றைய அரசியல் கட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டவை

# மாகாணசபைகளை இணைக்க ஐந்து குழுக்களும் ஆட்சேபம்

## தமிழை அரசகரும மொழியாக்க சிபார்சு மாகாண ரீதியாக அப்பீல் நீதிமன்றங்கள்

இனப்பிரச்சினைத் தீர்வுபற்றிய யோசனைகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் நியமிக்கப்பட்ட ஐந்து உபகுழுக்களும் நேற்று தனித்தனியாக சமர்ப்பித்த தங்களின் அறிக்கையில் மாகாண சபைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகவே இயங்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கியுள்ளதுடன், எக்காரணம் கொண்டும் இரு மாகாண சபைகள் இணைய முடியாதென்றும், அவ்வாறு இணைப்பதற்கான முயற்சிகளை நிராகரிக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியுள்ளன.

இக்குழுக்களின் அறிக்கையின் விபரங்கள் நேற்று மாலை நடைபெற்ற அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் முன்வைக்கப்பட்டது. முன்னைய மகாநாட்டில் கலந்து கொண்ட சகல கட்சிகளும் நேற்றும் கலந்து கொண்டன.

அமைச்சர் ஹமீத் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையில், மாகாண சபைகள் சில பொது வேலைத் திட்டத்தின் கீழ் இணைந்து இயங்க வேண்டி வந்தால் ஜனாதிபதி தலைமையில் அதற்கான வேலைத் திட்டங்களைச் செய்யலாமென்று தெரிவித்துள்ளது.

— 6 ஆம் பக்கம் பார்க்க

### விஜே எதிர்ப்பு

தமிழை அரசகரும மொழியாக்கும் ஆலோசனைக்கு நேற்றைய அரசியல் கட்சிகள் மாநாட்டில் ஸ்ரீலங்கா

—6-ம் பக்கம் பார்க்க

## அறுநூறு புதிய இராணுவம் நேற்று கிளிநொச்சி வந்தது

அனுராதபுரத்திலிருந்து சுமார் அறுநூறு புதிய ராணுவத்தினர் நேற்று கிளிநொசசி வந்து சேர்ந்தனர். இவர்களுடன் புதிய கவசவண்டிகளும், ட்ரக் வண்டிகளும் கிளிநொச்சி வந்துள்ளன.

நேற்று முன்தினம் வடக்கு நோக்கிவந்த பெரும் தொகையான ராணுவத்தில் ஒரு பகுதியினரே நேற்று கிளிநொச்சி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருபது புத்தம் புதிய "ஸ்கவுட் கார்களும்" கிளிநொச்சி வந்துள்ளன. இதனைத் தொடர்ந்து நேற்று இப்பகுதியில் பதற்றம் நிலவ ஆரம்பித்தது.

## ஏழு சடலங்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டன

(முல்லைத்தீவு)

நெடுங்கேணியில் நேற்று முன்தினம் பஸ்ஸில் வைத்துக் கொல்லப்பட்டவர்களில் ஏழு பேரின் சடலங்கள் மட்டுமே நேற்று அடையாளம் காணப்பட்டன. மொத்தம் பத்துச் சடலங்கள் இங்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

பஸ் சாரதி இமானுவல், வவுனியாவைசேர்ந்த ஏ சரோஜினி, வவுனியாவைச் சேர்ந்த ஆர். கற்பகம், நீராவிப்பிட்டியைச்சேர்ந்த சாஹுல் அப்துல் காதர், தண்ணீரூற்றைச்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## ராணுவ "பாஸ்" ரத்து பற்றி 'இன்று முடிவு தெரியும்

யாழ்ப்பாண லொறிகள் கொழும்புக்குச் செல்வதற்கு இராணுவம் பாஸ் வழங்குவதை ரத்துச் செய்வது பற்றி சில முக்கியமான முடிவுகள் இன்று எடுக்கப்படும்.

லொறி உரிமையாளர்சங்கப் பிரதிநிதிகள் நேற்று மாலை யாழ்.மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்காவைச் சந்தித்து இப்பிரச்சினைபற்றி பேசினர்.

இது பற்றி இன்று முடிவு தெரிவிப்பதாக பிரிகேடியர் இவர்களிடம் தெரிவித்தார்.

## 20 ஊர்காவற் படையினர் புலிகளின் சூட்டுக்குப் பலி

நெடுங்கேணியில் உழவு இயந்திரமொன்றில் சென்று கொண்டிருந்த இருபது ஊர்காவற்படையினர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவம் டொலர்பாம் இராணுவ முகாமிலிருந்து ஐநூறு யார் தொலைவில் நிகழ்ந்துள்ளது.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தமிழ் மக்களின் பொருட்களை சூறையாடுவதற்காக தெனிஒயாவை நோக்கி டொலர்பாம் இராணுவ முகாமிலிருந்து சென்ற ஊர்காவல் படையினர் மீது தாம் மேற்கொண்ட தாக்குதலில் இருபது ஊர்காவல்படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாஸ் ரத்து!

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் தனியார் பஸ்களுக்கும், பொதிகள் எது

—6 ஆம் பக்கம் பார்க்க

## நெடுங்கேணியில்ராணுவம் சுட்டு மாணவன் உட்பட ஏழுபேர் பலி

(நெடுங்கேணி)

நெடுங்கேணிப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏழு பேர் மரணமாகியுள்ளனர். இதில் ஐவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

கு. வேலாயுதபிள்ளை (21), தியாகராஜா, மயில்வாகனம் (23), சுப்பிரமணியம் சபாரத்தினம் (30), சிவலிங்கம் விவேகானந்தன் (17) ஆகிய ஐவரது சடலங்களுமே அடையாளம் காணப்பட்டவையாகும்

இறந்தவரான விவேகானந்தன் நெடுங்கேணி மகாவித்தியாலய உயர்வகுப்புமாணவனாவார். இவரது சடலத்தை தவிர மற்றைய நால்வரது சடலங்களையும் இராணுவத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

இங்குள்ள மரங்களில் பதுங்கியிருந்தே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக காயத்துடன் தப்பிய ஈஸ்வரன் என்பவர் தெரிவித்தார்.

## கண்ணிவெடியில் சிக்கி இராணுவம் பலி; பதில் தாக்குதலில் இரு 'புலிகள்' மரணம்

நேற்று முன்தினம் நெடுங்கேணி பெரியகுளம் என்னுமிடத்தில் இடம்பெற்ற நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ தரப்பில் பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

'கடந்த வியாழக்கிழமை நெடுங்கேணியில் உள்ள எமது முகாமை முற்றுகையிட டொலர்பாம், சிலோன் தியேட்டர் ஆகிய இரு முகாம்களிலுமிருந்து வந்த முன்னூறுக்கும் அதிகமான இராணுவத்தினருடன் ஏற்பட்ட ஐந்து மணித்தியால கடுஞ்சமரில் இராணுவதரப்பில் உயிர்ச் சேதமேற்பட்டது. இதனால் பின்வாங்கிய இராணு

— 6ஆம் பக்கம் பார்க்க

### தொலைதொடர்பு ஊழியர் வேலைக்கு மறுப்பு

நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து யாழ். தொலை தொடர்பு திணைக்கள ஊழியர்கள் எவரும் நேற்று வேலைக்குச் செல்லவில்லை.

தமக்குப் பாதுகாப்பு கிடையாது என்று பல ஊழியர்களும் தெரிவித்திருந்தனர்.

## ஜனாதிபதியுடன் கூட்டணி நேற்று இருதடவை பேசியது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு நேற்று இரண்டு தடவை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசியது.

நேற்றைய காலைச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்றது.

நெடுங்கேணியில் பஸ்ஸில் பயணம் செய்த தமிழர்கள் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டது பற்றி ஜனாதிபதியிடம் தெரிவித்தபோது

— 6ஆம் பக்கம் பார்க்க

### சாரதி சடலம் அடக்கம்

(வண்ணார்பண்ணை)

நெடுங்கேணியில் நேற்று முன்தினம் இ.போ.ச. பஸ்

— 6ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### தேவை

அரிச்சுவடி ஏடுகள் அச்சிடுவதற்கு தொகையாக பனை ஓலைச்சார்வு தேவை வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும். -மில்க்வைற், யாழ்ப்பாணம். B/1419

### வெற்றிடங்கள்

1. G. C. E. (O/L) ஆங்கிலத்திலும் கணக்கிலும் 20 க்குக் கூடுதலான பெண் ஆசிரியைகள் 7ம் வகுப்பு மட்டும் இரண்டு பாடங்களும் இரண்டு வருடங்களுக்குக் கற்பிக்கத் தேவை. சம்பளம். ரூபா 2,500/- உணவும், இருப்பிடமும், ரியூசன் வசதிகளும் கொடுக்கப்படும் 2. எஞ்ஜின் போட்டு திருத்தும் மெக்கானிக்மார்கள் (Marine Mechanics) பெற்ரோல் டீசல் எஞ்ஜின்கள் திருத்தக் கூடியவர்கள் - 10. 3. ஹோட்டல் வேலையாட்கள்: வெயிற்றேர்ஸ் - 6, சமையலாட்கள்-6, பார்மன்-6 நிலம் சுத்தம் செய்வோர்-6. விரைவில் சந்திக்கவும். டாக்டர். V. சிறிஸ்காந்தா, "ராஜஸ்த்தான்", கீரிமலை வீதி, சண்டிலிப்பாய். R/24063

## பல்கலைக்கழக மறுமலர்ச்சி கழக போட்டி

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்கு' என்ற தலைப்பில் கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகள் பாடசாலை மாணவர்கள், ஏனையோர் என இரு பிரிவுகளாக நடைபெறுமெனவும் சிறந்த ஆக்கத்திற்கு பரிசு வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் அனைத்தும் அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன்பாக செயலாளர் மறுமலர்ச்சிக்கழகம் யாழ். பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

### இன்று

(நயினாதீவு)

நயினாதீவில் உள்ள மூன்று பாடசாலைகளும் பங்கு பற்றும் கல்விப் பொருட்காட்சி இன்று சனிக்கிழமை காலை பத்து மணிக்கு நயினாதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்

## பொருட்காட்சி

ஊரெழு சீ- சீ- த- க பாடசாலையின் கல்விப்பொருட்காட்சி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசாவினால் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி பொருட்காட்சியைப் பார்வையிட்ட அதிகாரி அவர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நன்கு ஒத்துழைத்துப் பொருட்காட்சியை அமைத்துள்ளார்களென்றும், பிள்ளைகளின் ஆற்றல் நன்கு வெளிக்கொணரப்பட்டு இருந்தனவென்றும் பாராட்டியுள்ளார்.

## 'என்னதான் முடிவு' மேடையேற்றம்

வேல் ஆனந்தன் நாட்டிய அமையத்தின் "என்னதான் முடிவு" நடன நாடகம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையும், மாலையும் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடக்கவிருக்கிறது. யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஆதரவில் நடக்கஇருக்கும் இக்கலைப்படைப்பு சமகால சம்பவங்களை அழகியல் அந்தஸ்துக் குறையாமல் சித்தரிக்கின்றது.

### இன்று

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீசித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி இன்று காலை நடைபெறும்.

## கதம்பவிழா

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலைய மாணவிகளின் நாட்டிய, சங்கீத நிகழ்ச்சிகளும், கலாவிநோதன் சின்னமணி குழுவினரின் வில்லுப் பாட்டும் அடங்கிய கதம்ப விழா நாளை காலையும், பிற்பகலும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## சைக்கிள்கள் மீட்பு

திருநெல்வேலியில் வைத்து களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் (சீ.50) ஒன்றும், மூன்று ஏசியா சைக்கிள்களும் மக்கள் விடுதலைப் படையால் மீட்கப்பட்டுள்ளன.

இவை உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் விடுதலைப்படை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் களவாடியவரான இரத்தினகோபால் என்பவர் மக்கள் விடுதலைப்படையினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

## மஹாயாகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலில்மஹாயாகம் (மஹா கணபதி அஷ்டலக்ஷ்மி, மஹாலக்ஷ்மி, நவக்கிரக துர்க்கா ஹோமங்கள்) நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது. சிவ ஸ்ரீ மணிக்குருக்கள் இதனை நடத்திவைப்பார்.

## பிரயாண ஒழுங்குகள்

### கனடா, டென்மார்க், சவூதி அரேபியா

கனடா, டென்மார்க் ஆகிய நாடுகட்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளும் இன்றி நேரடியாக உடன் அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு, தொழிலாளர், ஆஸ்பத்திரி கிளீனர் ஆகிய வேலைகட்கு உடன் ஆட்கள் தேவை. 26ம் திகதிக்கு முன்பாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு;

**N. பாலா**

கோண்டாவில் கிழக்கு,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்.

பஸ் வழி இல:
764, பலாலி வீதி.
R/24067

## பிறந்த நாள் வாழ்த்துகள்

✽ ஜேர்மனியில் வசிக்கும் கமலேஸ்வரன் கலாதேவி தம்பதியின் மகள் ஷர்மிளா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✽ இணுவில் கிழக்கு வேம்போலை சிவசுப்பிரமணியம் மனோன்மணி தம்பதியின் மகன் கிருஷ்ணராஜ் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## இலட்சார்ச்சனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலய இலட்சார்ச்சனை இம் மாதம் 29-ம் திகதி காலை ஆரம்பமாகிறது. இதற்கு முன் இலட்சார்ச்சனையை முன்னிட்டு 28ம் திகதி காலை மகாகணபதி ஹோமமும், மாலை ஸ்ரீ துர்க்கா ஹோமமும் நடைபெறும்.

இந்த இலட்சார்ச்சனை தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

## அதிர்ச்சியால் இளைஞர் மரணம்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் கிளிநொச்சி முகாமிலிருந்து திருநகர் வதனி பேக்கரிவரை வந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலால் தொடர்ந்து முன்னேற முடியாது முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். இதேவேளை முகாமிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்', திருநகர், ஜெயந்தி நகர் பகுதிகளில் வந்து விழுந்ததில் இருவர் காயமடைந்தனர். இச்சம்பவத்தின் போது அதிர்ச்சி காரணத்தினால் ஜெயந்தி நகரைச் சேர்ந்த பதினைந்துவயது இளைஞரொருவர் மரணமடைந்தார்.

## மூன்றுவது பிறந்தநாள் வாழ்த்து



### தினேஷ் ஆனந்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருநாவுக்கரசு செல்வராணி தம்பதியின் புதல்வன் தினேஷ் ஆனந் தனது மூன்றுவது பிறந்த தினத்தை இன்று (19-7-86) ஆனைக்கோட்டையில் விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை ஓமான் அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார், அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, பெரியம்மா, பெரியப்பா, மாமாமார், அத்தைமார், சித்தப்பா, சித்திமார் நீடூழிவாழ வாழ்த்துகிறார்கள்.

B/1421

உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் வழங்கும் பரிசு

அமிர்த **கங்கை**

பெரிய அளவு - புதிய அமைப்பு

மூவர்ண அட்டைப்படம்

★ ரமணி - பாலர் பகுதி அதிக பக்கங்களுடன்.
★ ஆடி மாத சோதிட இராசிபலன்.
★ சிறு கதைகள், கட்டுரைகள், தொடர்கதைகள்.

விலை ரூபா 5/- மட்டுமே

அமிர்த கங்கை, 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**Computer Programming & Data Processing Course**

**Basic Language**
**6 Months**

Weekend classes by qualified and experienced panel of lecturers.

Commencement: 27th July, 1986, 10 மணி

Fees: 1500 (தவணைமுறையிலும் செலுத்தலாம்)

60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals
Ideal for those who seek employment abroad
வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்

I.C.M.A., A.A.T., I.D.P.M. I.A.B., Radio & TV., Engineering, TOEFL வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

"We never forget you have a choice"

**CANTABIA INSTITUTE**

(Pioneers in Computer Education)
21, MAIN STREET,
JAFFNA.

B/1404 Phone: 24201

சமய நிகழ்ச்சியில் அறிவுரை

# முயற்சியும், நம்பிக்கையும் வாழ்வில் வளத்தைத் தரும்

(சரசாலை)

''வாழ்க்கையில் நாம் நல்ல பலனையடைய இரண்டு வழிகளை கையாள வேண்டும். ஒன்று முயற்சி, மற்றது நம்பிக்கை. நம்பிக்கையே வாழ்க்கையின் அத்திவாரயாகும். மனத்தில் சிந்திப்பனவே செயல்ரூபமாக நடக்கின்றன. எறும்பின் காலடி ஓசையைக் கூட இறைவன் கேட்கின்றான் என சுவாமி இராமகிருஷ்ணர் குறிப்பிட்டார். எனவே நாம் சிந்திப்பன, செய்வன யாவற்றையும் இறைவன் அறிந்து கொண்டே இருக்கிறார். கடவுள் நினைவு மிக அவசியம். அதேபோல் தருமமும் செய்ய வேண்டும். வசதி படைத்தோர்க்கு கடவுளை வழிபட ஆலயம் செல்ல நேரம் மிகக் குறைவு. எனவே வழிபாட்டிற்கு என ஐந்து நிமிடத்தை யாவது ஒதுக்கி வழிபடவேண்டும். வாழ்க்கையை ஒரு குறிக்கோளுடன் நடாத்தவேண்டும். கோவில்களை பழங்காலத்தில் நல்ல நோக்குடன் மனிதன் மனத்தை ஆழ்ந்து அறிந்தபடியால் கட்டினர். ஆலய கோபுரங்களை தூரத்தில் காணும் போதே இறை சிந்தனை ஏற்படும் நோக்குடன் கோபுரங்கள் உயரமாகக் கட்டப்பட்டன. நடுக்கடலில் கஷ்டப்படும்போது திசைகருவி திசையை காட்டுவதுபோல் வாழ்க்கையில் கஷ்டப்படுபவர்களுக்கு கோவில்கள் நல்வழியை காட்டுகின்றன. ஒருவர் யாத்திரை செய்யும் போது அதன் பலன் பலருக்கு கிடைக்கும். நாம் கோயிலில் பிரார்த்தனைசெய்கிறோம். வழிபடுகிறோம். அதுபோல வீட்டிலும் குடும்பம் முழுதும் சேர்ந்து குடும்பப் பிரார்த்தனையிலே ஈடுபட வேண்டும். ஒருவனுக்கு ஓய்வு கிடைக்கும்போது திசைமாறி செல்லும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி இறைவழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும்.''

இவ்வாறு திருத்தல யாத்திரை மேற்கொண்டுவரும் பாதயாத்திரை குழுவினர்க்கு தலைமைதாங்கி நடாத்திவரும் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா குறிப்பிட்டார்.

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் ஆலய கூட்டுப் பிரார்த்தனை சபை தலைவர் திரு. ச. நமசிவாயம் தலைமையில் இடம் பெற்ற வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர் இத்திருத்தலயாத்திரை தென்மராட்சி முழுவதும் நடாத்தி வருகிறோம். ஆலயம் எவ்வாறு வளர்ச்சி பெற்று விளங்குகின்றதோ அதே போல் கிராம மக்களும் வளர்ச்சி பெற்று விளங்குவர்' என்றார்.

பாதயாத்திரை குழுவினரை ஆலய பரிபாலன சபையினரும் ஊர் மக்களும் வரவேற்று ஆலயத்திற்கு அழைத்து சென்றனர். இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். சிவஞானம் தனதுரையில், 'இன்றைய சூழ்நிலையில் இறைவனை நினைக்க இத் திருத்தலயாத்திரை உதவும். நாம் ஒழுக்கத்துடன் வாழ மனத்தை நல்வழிப் படுத்த வேண்டும். நல்ல நூல்களை வாசிக்க வேண்டும் நல்ல அறிஞர்களின் பேச்சை கேட்க வேண்டும் என்றார்.

கல்வயலூர் இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். முத்தையா தனதுரையில், 'பாடசாலைகளில் சமயக்கல்வி நல்ல முறையில் படிப்பிக்க வேண்டும். இதனை ஆசிரியர்கள் செய்ய வேண்டும்' என்றார்.

இளைப்பாறிய ஆசிரியர்கள் திரு. க. இராசரத்தினம் திரு. சரவணமுத்து, சி. வைரவப்பிள்ளை) ஆலயபரிபாலனசபை செயலாளரும் இந்துக்கல்லூரி விரிவுரையாளருமான திரு க. செல்லத்துரை உட்பட பலர் கலந்து கொண்டனர். இளைஞர் சேவையதிகாரி திரு. கு. பரராசசேகரம் பாராட்டுரையும் நன்றியும் தெரிவித்து உரையாற்றினர்.

ஆசிரியர் சிரிய வழிகாட்டியானால்

# மாணவரின் திறனுற்றல் சுலபத்தில் வெளிப்படும்

(நீர்வேலி)

''ஒரு பாடசாலையில் எல்லாவற்றினையும் விட ஆசிரியனே மிகச் செல்வாக்குடைய கூறாகும். கல்வி ஏற்பாடு, ஆக்கம், அமைப்பு, தளபாடங்கள், கட்டடங்கள் ஆகியவை முக்கியமானவையாயினும் உயிருடன் இயங்கும் ஆசிரியன் ஆளுமையால் உணர்வூட்டம் பெறுவிட்டால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படா. உயிருடன் இயங்கும் ஒரு மனிதன் பிரபஞ்சத்தின் ஒரு துண்டாகும்.''

இவ்வாறு கோப்பாய் தெற்கு றோ. க. த. பாடசாலையில் நடை பெற்ற கண்காட்சியின் போது மங்கள விளக்கு ஏற்றிவைத்து உரையாற்றிய கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு. பூ. க. இராஜரட்ணம்குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு த. கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: ''எந்த ஒரு ஆசிரியனும் சிறந்த வழிகாட்டியாக அமையும்போது மாணவர் ஆற்றலை வெளிக்கொணர்வது சுலபம். அந்த முறையிலமைந்த கைவண்ணமே இங்கு கண்ணைக் கவரும் விதத்தில் உள்ளது. ஒரு பிரதம பாடசாலை அபிவிருத்தி அடையும் போது,ஏனைய பாடசாலைகளும் தானாகவே வளரும் என்பதில் ஐயமில்லை'' என்றும் கூறினர்.

பொருட்காட்சியைத்திறந்து வைத்து உரையாற்றிய வண. பிதா பிரான்சிஸ் குலாஸ், ''ஒரு மாணவன் சாதிக்க முடியாததை பல மாணவர்கள் சேர்ந்து சாதிக்கும் வகையில் இக்கண்காட்சியை பாடசாலை தோறும் நடாத்த வாய்ப்பளித்த கல்வியிலாகாவையும், அதிகாரிகளையும் பாராட்டாமல் இருக்கமுடியாது மாணவர்கள் நன்கு கற்று நாட்டுக்கும் வீட்டுக்கும் உழைக்க முன்வர வேண்டும்'' என்றார்.

இக்கட்டான வேளையிலும்

# கல்வியில் உள்ள கரிசனை சற்றும் தளரக் கூடாது

(சரசாலை)

''இன்றைய இருள் சூழ்ந்த காலகட்டத்திலே தமிழ் மாணவர்களுக்கு போதிய வசதிகள் இல்லாதுள்ளதை யாவரும் அறிவர். ஆனாலும் தமிழ் மக்கள் கல்வியே தமது சொத்தாகக் கருதி வருகின்றனர். அதற்காக தமது சக்தியை பயன்படுத்தி வருகின்றனர். மாணவர்கள் தாம் கற்றவைகளையும், ஆசிரியர்கள் தாம் கற்பித்த விடயங்களையும் வெளிப்படுத்த இது போன்ற பொருட்காட்சிகள் உதவுகின்றன. தென்மராட்சிப்பகுதியில் பல பாடசாலைகளின் பொருட்காட்சியைப் பார்வையிட்டுள்ளேன். இங்கு நடைபெறும் பொருட்காட்சி இப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் திறமைகளை எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன. எத்தனையோ கஷ்டங்கள் மத்தியிலும் பொருட்காட்சிக்கு வேண்டியனவற்றை உபகரணங்களை தேடி எடுத்து தமது பிள்ளைகளுக்கு கொடுத்த பெற்றோர்கள் தம்பிள்ளைகளின் கல்வியில் கொண்ட அக்கறையை எடுத்துக்காட்டுகின்றது.''

இவ்வாறு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய கலைவிப் பொருட்காட்சியை ஆரம்பித்து பார்வையிட்ட சாவகச்சேரி வட்டாரக் கல்வியதிகாரி திரு. அ. தங்கராசா குறிப்பிட்டார்.

மேற்படி மகாவித்தியாலய அதிபர் திரு. கே. பேரம்பலம் தலைமையில் பொருட்காட்சி இடம்பெற்றது.

மாணவர்களின்

# தொழில் திறமை வளரவும் வாய்ப்பளிக்க வேண்டும்

(சுழிபுரம்)

''இன்றைய நவீன உலகில் ஏட்டுக்கல்வி மட்டும் பூரணத்துவத்தைத் தராது. தொழில் நுட்ப யுகமாக மாறிக்கொண்டிருக்கும் உலகின் நிலையுடன் நாம் ஒன்றிப்போக வேண்டும். இதனால் இன்று, எமது பெற்றோர் தங்கள் பிள்ளைகள் ஏட்டுக் கல்வியைக் கற்க வேண்டும் என்றும் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும் என்றும் எண்ணுவதை கைவிட வேண்டும். இன்றைய கால வோட்டமும் சமுதாய மாற்றமும் மாணவர்களை தொழிற் திறமைகளை வெளிப்படுத்துவனவாக மாறி வருகின்றன. இந்த மாறும் சூழ்நிலைகளுக்கேற்பப் போதிக்க வேண்டிய பாரிய பொறுப்புக்களை கல்லூரிகள் ஒவ்வொன்றும் கொண்டுள்ளன.''

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றிய பிரதம கல்வி அதிகாரி திரு. வி. தங்கராஜா கூறினர்,

கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் விழாவிற்குத் தலைமை வகித்தார். வட்டாரத் தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா, காரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. எஸ். பத்மநாதன் ஆகியோரும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

# 'கடல் தொழிலாளர் கஷ்டம் நீங்க நடவடிக்கை தேவை'

(அரியாலை)

''கடல் தொழிலாளர்கள் கடல் சட்டத்தினாலும், அண்மையில் நடைபெற்ற மண்டைதீவுச் சம்பவத்தாலும், பயம் காரணமாகத் தொழிலுக்குச் செல்வதில்லை. தற்பொழுது இத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு முத்திரை இவர்களுக்கு ஒரு நாளைக்கே போதுமானதாக இருக்கிறது. நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை தற்காலிகமாகவாவது ஐந்து மைல் தடைச் சட்டத்தை நீக்கினால் கடற்றொழிலாளர்களுக்கு ஓரளவு ஆறுதலாக இருக்கும். இதனால் கடற்றொழிலாளர் குடும்பங்கள் பெரும் பாதிப்பை அடைந்திருக்கின்றன''

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாச உப- தலைவர் திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச் சட்டத்தினால் குருநகர்ப் பகுதித் தொழிலாளர்கள் மிகவும்பாதிக்கப்பட்டுள்ளார்கள்– இவர்கள் ஆழ்கடல் தொழிலைச் செய்பவர்களாகும். நாவாந்துறைப் பகுதித் தொழிலாளர்களும் கரையில் இறங்க முடியாத அளவு பாதிக்கப் பட்டுள்ளார்கள். பாஷையூர், கொழும்புத் துறைத் தொழிலாளர்களின் பாதிப்பையும் குறிப்பிட்டார்.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(கரவெட்டி)

யாழ். கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கிடையே நடாத்தி வரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டத்திற்கான இறுதிப் போட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி விளையாடி முறையே 5:4 என்ற கோல்களால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் வெற்றி பெற்று அரை இறுதியாட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

தன்னலங் கருதாத

# ஆசிரியர்களின் சேவை போற்றுதற்குரியது

(நெடுந்தீவு)

''தன்னலங் கருதாது கடமையாற்றும் ஆசிரியர்களின் நற்பணி போற்றப்பட வேண்டும். நெடுந்தீவுப் பாடசாலை ஆசிரியர்கள் பலர் வெளியூர்களிலிருந்து பல கஷ்டங்களுக்கிடையே இங்கு வந்து தமது கடமைகளைச் செய்கின்றார்கள். நல்ல சூழலில் மனச்சஞ்சல மற்று வாழும் ஆசிரியனிடமிருந்தே நல்ல கல்வியைப் பெற முடியும். நாளுக்கு நாள் வசதியீனங்கள் அதிகரித்து வரும் இந்நாட்களில் ஆசிரியர்களின் வசதியீனங்களை பெற்றோரும், சக ஆசிரியர்களும் மாத்திரமல்ல, நிருவாகமும் உணர்ந்து உதவ முன்வர வேண்டும்.''

இவ்வாறு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. ஆறுமுகத்தால் கூட்டப்பட்ட உப வட்டார ஆசிரியர் கூட்டத்தில் சங்கீத பூஷணம் திரு. வே. சுந்தரலிங்கம் (ஆசிரியர்) பேசுகையில் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், ''நெடுந்தீவுப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுவரும் வெளியூர் ஆசிரியர்கள் நிரந்தரமாகவே பல வருடங்கள் ஒரே இடத்தில் இடமாற்றம் செய்யப்படாமல் இருப்பதுவும் அவர்களது கடமையைச் சரிவரச் செய்யும் மனோநிலையை இழக்கச் செய்கின்றது. இதற்கென ஒழுங்குபடுத்தப்பட்ட வருடாந்த இடமாற்றம் ஒன்றை நெடுந்தீவுப் பாடசாலைகள் விடயத்தில் நிர்வாகம் கவனிக்க வேண்டும்'' என்றார்.

புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் ஆசிரியர் தலைமையில் நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## புனர்வாழ்வு உதவி நிறுவனங்கள் ஒன்றியம்
## விசேட பொதுக் கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் 20-7-86 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (மனோகரா சினிமா அருகில்) விலாசத்திலுள்ள ஈழமுரசு பணியகத்தில் ஷ விசேட பொதுக் கூட்டம் நடைபெறும். தனிப்பட்ட அழைப்பு கிடைக்காதவர்களும் இவ்வேண்டுகோளை ஏற்று சமுகமளிக்கவும்.

மயில். அமிர்தலிங்கம்,
இணைப்பாளர்.

CONSORTIUM - Relief Aid Organisations.

**உதய சிந்தனை**

எவ்வளவு கொடிய பகை உடையவரும் தப்பி வாழ முடியும். ஆனால் தீயவை செய்தால் வரும் தீவினையாகிய பகை நீங்காமல் பின் சென்று வருத்தும். —குறள்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

19-7-86 சனிக்கிழமை (அக்ஷய) ஆடி 3

# படுகொலை வாரமும் தலைநகர் பேச்சுக்களும்

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள், எப்போது, எங்கு நடைபெற்றாலும், அந்த நாட்களில் தமிழர் படுகொலைகள் திட்டமிட்டு நடத்தப்படுவது வழக்கமாகிவிட்டது.

1984ம் ஆண்டு சர்வகட்சி மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், முதற்தடவையாக யாழ்ப்பாணம் கொழும்பு தனியார் பஸ் வவுனியாவில் கடத்திச் செல்லப்பட்டு, தமிழ்ப் பயணிகள் வரிசையில் நிறுத்தப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1985ம் ஆண்டு திம்புவில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வவுனியாவில் கறுப்பு உடையினர் முதல் முறையாக தமிழர்களை படுகொலை செய்யும் தங்கள் படலத்தை ஆரம்பித்தனர்.

இப்போது, கொழும்பில் அரசாங்கத்துக்கும் கூட்டணிக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் மீண்டும் படுகொலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாறு நாம் குறிப்பிடுவதனால் மற்றைய நாட்களில் தமிழர் படுகொலைகள் நடத்தப்படுவதில்லை என்று அர்த்தம் கொள்ளக் கூடாது.

தமிழர் படுகொலை 1983ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து தொடர்கதையாக நடைபெற்றுக் கொண்டே வருகிறது.

ஆனால் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் சொரியலாக நடைபெறாமல், "மொத்த விற்பனை" போல தமிழர் படுகொலை செய்யப்படுவதையே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம்.

இந்த வாரத்தில் தினசரி இவ்வாறான படுகொலைகள் இடம் பெற்றுவருகின்றன.

அடம்பனில், மூதூரில், பாவற்குளத்தில் என்று தொடராக இடம்பெற்ற படுகொலைகள் நேற்று முன்தினம் நெடுங்கேணியில் இடம்பெற்றுள்ளன.

முழுக்கமுழுக்கப் பிரயாணிகளுடன் புறப்பட்ட இ.போ.ச. பஸ் ஒன்றின் மீது வானத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலினால் பதின்மூன்று பேர் மரணமாக நேர்ந்ததாக முதலில் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த குறிப்பிட்ட பஸ்ஸில் ஆண், பெண், சிறுவர், வயோதிபர், முஸ்லிம்கள், தமிழர் என்று பலதரப்பட்ட பயணிகள் இருந்துள்ளனர்.

குண்டுவீச்சினால் பஸ்சாரதியும் உயிரிழந்தவர்களுள் ஒருவர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் பற்றிய செய்தி சரியாக வெளிவருவதற்கு முன்னரே அரசாங்கம் வழக்கம்போல செய்தி அறிக்கையொன்றை வெளியிட்டது.

"நெடுங்கேணியில் ஒரு பெண் உட்பட ஏழு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்" என்பதே அந்தச் செய்தி.

இதே போலவே, மூதூரிலும் ஒரு பெண் உட்பட பதினாறு பயங்கரவாதிகளை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதாக நேற்று முன்தினம் மற்றொரு அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டது.

மொத்தத்தில் பார்க்கும்போது, கொல்லப்படும் தமிழர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் என்பது அரசாங்கத்தின் கூற்றாகும்.

அப்படியானால் எஞ்சியிருக்கும் தமிழர்களும் அவர்களின் பார்வையில் பயங்கரவாதிகளாகவே கணிக்கப்படுவர்.

அப்படியானால், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் ஏதாவது பயன் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாமா?

இந்த வாரத்தை "தமிழர் படுகொலை வார"மாக நாம் எடுத்துக் கொள்வோமானால், கூட்டணியினர் பேச்சுவார்த்தைக்கு வந்தமையால்தான் இவை இடம்பெற்றுள்ளதாகக் கருத இடமுண்டு.

பேச்சுவார்த்தைகளை விரும்பாத ஆயுதப்படையினர், பேச்சுக்கள் நடக்கும்போதெல்லாம் படுகொலைகளைப் புரிவது இப்போது நன்கு புலனாகின்றது.

திம்புப் பேச்சுக்களில் பங்குபற்ற போராளிகள் மறுத்ததற்குக் காரணமே, அப்போது இடம்பெற்ற படுகொலைகள்தான்.

கூட்டணியினர் இன்றைய வேளையில் இதனை நினைவுபடுத்துவது நல்லது.

யாரிடம் முறையிட்டும் படுகொலைகளை நிறுத்த முடியாது.

பேச்சுக்களை நிறுத்துவதன் மூலமே தமிழினப் படுகொலைகளை உலகின் கண்களுக்கு தெரியப்படுத்த முடியும்.

★ நேற்று முன்தினம் வெளியான மொழிபெயர்ப்புக் கட்டுரையின் இறுதிப் பகுதி

# ஜெயவர்த்தன அன் கம்பனி மிரட்டலின்மூலம் தீர்வினை திணிக்க முயற்சிக்கின்றது!

இலங்கையிலுள்ள தமிழர் பிரதேசங்களினின்றும் கூட்டணித் தலைவர்கள் உடல் வகையிலும் அரசியல் ரீதியாகவும் தொலைதூரம் சென்று தங்கியிருக்கின்றனர். இங்கு, அடிப்படையில் மக்களின் நிலைமையை அவர்கள் அறியமாட்டார்கள். தமிழீழ விடுதலைப் போராளிகளின் செயற்போக்கும் சிந்தனோபாயமும் எப்படியாக அமைகின்றன? இப்போக்கும், உபாயமும் எப்பேர்ப்பட்டவை? இவற்றின் ஏது விளைவுகளும் அர்த்தமும் யாவை? இவைகளையும் இக் கூட்டணியினர் உணரார். ஆக, இவை காரணமாக, இந்தக் கூட்டணித் தலைமையின் எதேச்சையான, சுதந்திரமான செயல் முனைப்பு மட்டுப்படுகிறது. தமிழர் விடுதலைப் போராளிகளின் செயல் மார்க்கம் ஒன்று. அதனின்றும் பிரிந்து வேறுபடும் அளவிற்கு கூட்டணியினரின் தொழிற்பாடுகள் இவற்றால் உள்ளடங்கும்படியாகின்றன.

இங்கு இதுவரை எடுத்தியம்பப்பட்ட நிலைமைகள் மெய்ம்மைகளேஎனக் கூட்டணியினது இத் தலைவர்கள் சிலரின் நண்பர்களும், நலன் விரும்பிகளும் கூடக் கணித்து ஏற்றுக்கொள்கின்றனர்.

கொழும்பில் 1986, ஜூன் மாதம் இருபத்தைந்தாம் திகதியக் கூட்டத்திற் பங்குபற்றுவதில்லை எனும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தீர்மானம், இந்திய அரசின் பார்வையில் அவ்வளவு திருப்தியளிப்பதாக இல்லை. பதிலாக ஓரளவு ஏமாற்றத்தையே அவ் அரசிற்கு அத் தீர்மானம் அளித்துள்ளது. 1985 இல் இந்தியத் தூதுவராக இலங்கை வந்த ரமேஷ் பண்டாரி தமக்கே உரிய பாணியில் இராஜ தந்திரமும் அரசியலும் நிகழ்த்திச் சென்றார். 'ஹலோ, தோழரே! இனிதே சந்தித்தோம், இனிதே உடன்பட்டுக் கொண்டோம்' என்பது அந்த இராஜ தந்திரம், அரசியலின் தத்துவமாகும். அவர் தீவை விட்டுச் சென்றபின் அத்தத்துவத்தின் ஆழமற்ற தன்மை அப்பட்டமாயிற்று. அத்தன்மை புதுடெல்லிக்குப் பயனுள்ள ஒரு சில பாடங்களைக் கற்பித்தது. தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மீதும், தமிழீழ விடுதலைப் போராளிகள் மீதும் நெருக்குதல் பிரயோகிப்பது உத்தேசித்தவற்றுக்கு நேர்மாறான விளைவுகளை உண்டாக்கலாம்.

கொழும்பில் பலகட்சி மாநாடு கூடுதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர், மூவர் கொண்ட தூதுக்குழுவொன்று இலங்கையிலிருந்து சென்னைக்குச் சென்றிருந்தது. சிறீலங்கா மஹஜன கட்சியின் பொதுச் செயலாளர் விஜய குமாரணத்துங்க, அவரது மனைவி சந்திரிகா, இன்னும் ஒரு கட்சித் தலைவர், ஆகியோர் ஆக்கமான ஒரு நோக்கத்துடன் இந்தியாவுக்குப் போயிருந்தனர். பாட்டுக்கு ஏற்ற பயன் இதினின்றும் விளைந்தது என்பதைவிட, அதனாற் கிடைத்த ஆக்கபூர்வமான பலன் ஒரு சன்மானத்திற்குக் கூட ஒப்பானது என்பது சாலப் பொருந்தும்.

இலங்கையின் முன்னைநாட் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் மகளுடைய கணவனாகிய விஜயகுமாரணத்துங்க ஒரு திரைப்பட நடிகருமாவர். இவ்விடயத்தில் முன்னேறுவதில், முழுநேர சிங்கள அரசியல்வாதி எவரையும் இம்மருமகனார் விஞ்சியுள்ளார் எனலாம். கொமியூனிஸ்ற் கட்சியினர் மாத்திரம் 'இவ்வரசியல்வாதி' என்ற பதத்திற்கு விதி விலக்காவர். ஆனால், அவர்களோ இலங்கை அரசியல் வானில் ஒரு சிறு சக்தியாகவே இடம் வகிக்கின்றனர். நீண்ட அளவு எட்ட வல்ல, உருப்படியான அதிகார உரித்தாக்கல் அடிப்படையில் அமைந்த நியாயமான இணக்க உரையாடல்கள் வாயிலான ஓர் அரசியல் தீர்வு அவசியம்; தமிழர்களுடன் இத்தகைய ஒரு தீர்வுகாணப்படுதல் வேண்டும் என்கிறார் குமாரணதுங்க.

கொழும்பில் பல கட்சிக் கலந்தாலோசனைகள் ஆரம்பமாவதற்கு ஒரு நாள் முன்னதாக குமாரணத்துங்கவின் சென்னை விஜயம் முடிவுற்றது. தமிழர் தரப்பில் அனைவருடனும் போராளிகள், மிதவாதிகள் ஆகிய இரு சாராருடனும் பேச்சுவார்த்தைகள் அவசியம் என்றாரவர். இப் பேச்சுவார்த்தைகள் தவிர்க்கவொண்ணாதனவுங் கூட, என சிறீ லங்கா மஹஜன கட்சித் தலைவர் மேலும் கூறினார்.

பரந்த அடிப்படையிலான ஓர் அரசியற் கருவியாக புதிய யுத்த இடை நிறுத்தமொன்று அமுலாக்கப்படுவது நன்று எனவும் இம் மஹஜனக் கட்சித் தலைவர் ஆலோசனை வழங்கினார். இலங்கையின் அரசியலமைப்பிற்குரிய ஆறாவது ஷரத்தின் திருத்தம் வாபஸ் ஆதல் வேண்டும் எனவும் குமாரணத்துங்க வலியுறுத்தினார். இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழருக்கும் இடையே எழுந்துள்ள மோதலுக்கு ஓர் அரசியல் தீர்வு காண வழிவகுத்தலில் இந்தியாவின் நல்லெண்ணம் ஆக்கபூர்வமானது என நயந்து பாராட்டிய விஜய குமாரணத்துங்க, முன்னேற்றமான, சின்னத்தனமான மார்தட்டும் பாங்கற்ற ஒரு சிந்தனையாளர் எனவும் போற்றுதல் பெற்றார்.

ஆனால், அடிப்படையில் சில பாதி வாய்ப்புகள், மட்டுப்படுத்தப்பட்ட சாதகமான காரணிகள் ஆகியன எழுந்திருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானம் எடுக்கும் ஜெயவர்த்தன-அத்துலத்முதலி குழு இச்சந்தர்ப்பங்களை உரியவாறு பயன்படுத்தத் தவறிவிட்டன. அதற்கு அவர்களையே பொறுப்பாளிகளாகக் கொண்டு பழி சொல்லுதல் வேண்டும்.

"ஜெயவர்த்தன அன்ட் கம்பனி" குறித்த ஒரு வகையாக இராணுவ அரசியல் தீர்வுகளை ஒன்றோடொன்று கலந்து, பல 'சாதனைகள்' புரிந்துள்ளது: இலங்கைத் தீவு நாட்டின் ஒரு குறிப்பிடத்தகும் பாகமாக விளங்குபவர்கள் இலங்கைத் தமிழர்கள். இந்த நாட்டிலேயே அவர்கள் தனித் தொதுக்கப்பட்டு, அந்நியராக்கப்பட்டு வருகின்றனர். அவர்களை அந்நியப்படுத்தும் நடைமுறை நெடுங்காலமாக நிலவுகிறது. இந்நடைமுறையைஓர் உச்சகட்டத்திற்குக் கொணர்ந்து நிறைவேற்றியமை ஒரு 'சாதனை.' பழிபாவம் அறியாத அப்பாவிக் குடிசனங்கள்மீது ஒன்றினையடுத்து இன்னொன்றாக அனேக அட்டூழியங்களைப் பிரயோகித்தமை 'ஜெயவர்த்தன அன்ட் கம்பனி'யின் இன்னுமொரு 'சாதனை.' இணக்கப் பேச்சுக்கள் பிரயத்தனம் இதயபூர்வமானதென வெகுசொற்பமானோரே 'நம்பிக்கைகொண்டுள்ளனர்.' இராணுவ, அரசியல் தீர்வுகள் இவ்வாறாகக் கலக்கப்பட்டமையால் பிரமாண்டமான தொகைப் பணம் வீணே விரயமாகியுள்ளது; பெரும் அனர்த்தங்கள் பலவும் இலங்கைத் தேசத்திற்கு விளைந்துள்ளன.

இலங்கையின் நடப்புகளைச் சுதந்திரமாக அவதானித்து வருவோர், 1986, ஜூன்-ஜூலை மாத முதலாக, ஜெயவர்த்தன ஒரே சமயத்தில் மூன்று அல்லது நான்கு மார்க்கங்கள் வழிச் செயற்படுவதுபோன்று தோற்றுவதைக் கண்ணுற்று வருகின்றனர். அவற்றுள் முதலாவது, இணக்கப் பேச்சுக்கள் வாயிலான ஓர் அரசியல் தீர்வு காணும்முயற்சியைத் தொடர்தல். இந்தியாவின் நல்லெண்ணத்தை ஓர் திறவுகோலாகக் கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலை இயக்கங்களுக்கும் இடையே எழுந்துள்ள பிணக்கின் தீர்வாகவே இம்முயற்சி துரந்துசெல்லப்படுகிறது. கொழும்பைப் பொறுத்தவரையில், இப்பிரயத்தனப்பாதைவழியான அதன் பயணம்மாறிமாறி 'இயக்கமும் தடங்கலும்' என்ற படுமோசமான பாணியில் சென்று கொண்டு இருக்கிறது.

ஜெயவர்த்தன கடைப்பிடிக்கும் இரண்டாவது மார்க்கம், இலங்கைத் தீவில் நிலவும் நெருக்கடியினின்றும் மாத்திரமல்லாது, ஒருவேளை நாட்டின் குடிமக்கட் சமுதாய மத்தியினின்றும் கூட விடுபட ஆகவுமிருக்கலாம், வெடிகுண்டு 'விளாசி' ஓர் இராணுவப் படுகுழியை ஆக்கிக்கொள்ளும் முயற்சியை முன்னேற்றுதல் ஆகும். இலங்கைப் பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலியின் இச் சிறப்பான சித்தப்பிரமை, அவருடைய விசேடித்த செயற்பாடுகளில் ஒன்று. இலங்கையில் தமிழருக்கு எதிரான இப்போர் உங்களால் வெல்லப்பட முடியாதது என, இராணுவ நடவடிக்கைகளைத் தமது முழுநேரத் தொழிலாகக் கொண்டவர்கள் அவருக்கு எவ்வளவோ எடுத்துரைத்துள்ளனர். இப்படிக் கூறப்பட்டிருந்துங்கூட அவருடைய சித்தப்பிரமை நீங்கியபாடில்லை.

இந்த இராணுவத் 'தீர்வு' தமிழர் விடுதலைப் போராளிகளின் ஆயுதம் தாங்கிய மூர்க்கமான எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியே ஏற்பட்டது. அத்துடன் அமையாது, இராணுவ இலக்குகள், குடிசன இலக்குகள் மீதான தாக்குதலிலும் இப் போராளிகள் இறங்கினர். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட போராளி நிறுவனங்களில் இரண்டு:

(5ம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு செய்திகள்

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். றேட்டரிக் கழக அனுசரணையுடன் செயற்படும் 'இன்னர் வீல் கழகத்தினர்' யாழ். பெரியாஸ்பத்திரி பிரசவ வார்டுகளுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து பிரசவத் தாய்மார் நலனை அவதானித்தனர்.

இந்தவகையில் அவர்கள் பராமரிப்பற்ற நிலையில் அவதியுறும் தாய்மார் பிரசவித்த சிசுக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ஐம்பது பொதிகளை அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

இக்கழகத்தினர் ஏற்கனவே கைதடி வயோதிபர் விடுதிக்கு உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்ததும் இங்குகுறிப்பிடத்தக்கது.

## இன்று

(உடுவில்)

சங்குவேலி தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளன. பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வருகை தரவுள்ளார். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட எண்பத்தைந்து ஆண்டுகளில் இம்முறையே முதன்முறையாக நடைபெறவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

## நியமனம்

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் புதிய யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் மீண்டும் திறக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த திங்கட்கிழமைமுதல் இதன் அலுவலகம் யாழ் வீடமைப்புத் திணைகள கட்டடத்தில் இயங்கவுள்ளது

இதன் உதவி பணிப்பாளராக முன்னாள் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பணிப்பாளருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

''சிறிய பாடசாலை பெரிய பாடசாலை, கிராமியப் பாடசாலை பிரபல்யமான பாடசாலை என்ற பேதமின்றி சகல பாடசாலைச் சிறுர்களது கல்வி வளர்ச்சிக்காக நாம் உழைக்க வேண்டும். கற்றவர் உயர்ந்தோர் கல்லாதவர் இழிகுலத்தோர் என்ற அடிப்படையில் குல வேற்றுமை பார்க்க வேண்டுமேயொழிய சாதி. சமய,இன,இட அடிப்படையில் கல்விச் சேவையில் வேற்றுமை காணக் கூடாது. ஆண்டவன் சந்நிதியில் யாவரும் சமம் என்பது போல் கல்விச் சேவையின் முன் யாவரும் சமம். ஏழைகளுக்கு முதலில் சாப்பாடு பின்பு தான் வயிறுர சாப்பிட்டவர் களுக்கு பாயாசம் என்ற அடிப்படையில் பாடசாலைத் தேவைகளை உணர்ந்து என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன். இன்று மாணவர் கல்வியில் குழப்பமும் பெற்றோரிடம் பொருளாதாரக் குறைவும் நிலவுகின்றது இத்தருணத்தில் நீங்கள் கல்வி வளர்ச்சிக்கு எடுக்கும் முயற்சிகளுக்காகப் பாராட்டுகின்றேன்''

இவ்வாறு யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தம்மைச் சந்தித்த இளையதம்பி வித்தியாலய அபிவிருத்திச் சபையின் செயலவை உறுப்பினர்களுக்குக் கூறினர்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் அதிபர் திரு. கா. கணேசதாசன், செயலாளர் க. சிவகுரு, உபதலைவர் எம். வாமதேவா மற்றும் பல உறுப்பினர் சென்று பாடசாலைக் கட்டடம் சலகூடம் தளபாடம் ஆசிரிய பற்றுக்குறை தற்காலிக ஆசிரியர்களை பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவு செய்தல் அத்தியாவசிய தேவைகள் சம்பந்தமாக கலந்துரையாடினுர்கள். மிகுந்த கரிசனையுடன் கோரிக்கைகளைச் செவி மடுத்த கல்விப் பணிப்பாளர் தன்னுல் இயன்றவரை பாடசாலைத் தேவைகளை நிவிர்த்தி செய்து உதவுவேன் எனக் கூறினுர்.

---

### ஜே. ஆருக்கு கூட்டணிப் பிரதிநிதிகள் குழு அறிவிப்பு

# கொலை தொடரின் பேச்சு நிறுத்தப்படும் நிர்ப்பந்தம்

(சென்னை)

இலங்கையில் தமிழ்ப் பொது மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்படாத பட்சத்தில் இனப்பிரச்சினை தொடர்பான தற்போதைய பேச்சுவார்த்தைகளைத் தொடர்வது சிரமம் என்பதனை ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவிடம் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் குழு நேரடியாகக் கூறியுள்ளது.

இதனைத் திட்டவட்டமாக ஜனுதிபதியிடம் தெரிவித்து விட்டதாக கூட்டணிப் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டால் பேச்சுக்களைத் தாம் நடத்த முடியாத கடும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருப்பதாக இக்குழு ஜனுதிபதிக்கு மேலும் கூறியுள்ளது.

பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போதே தமிழர்கள் தாக்கப்படுவது, கொல்லப்டுவது குறித்து அக்குழு அவருக்குச் சுட்டிக்காட்டியது.

மூதூர், அடம்பன் மற்றும் சில இடங்களிலும் இனப் படுகொலை தாம் கொழும்பு வந்த பின் நிகழ்ந்துள்ளதாக குழு குறிப்பிட்டது.

இது இவ்வாறு இருக்க திருகோணமலையில் அகதிமுகாமில் வைத்து 67 தமிழ் அகதிகள் சிப்பாய்கள் என நம்பப்படுபவர்களால் கொலைபட்டதாக கூட்டணிச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கோள் காட்டி ஏ. எப் பி. செய்திஸ்தாபனம்செய்திவெளியிட்டுள்ளது. இது ஊர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் கூறியதாகவும் இச்செய்தி கூறியது

இந்த வகையில் தமிழ்ப் பொது மக்கள் தொடர்ந்து கொல்லப்படுவதால் தாம் மிகப் பெரும் நெருக்குதலுக்கு உந்தப்பட்டிருப்பதாக திரு. அமிர்தலிங்கம் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. அப்பாவி மக்கள் படுகொலையால் உண்டான திடீர் நிலைமாற்றம் பேச்சுக்கள் நடத்தும் விருப்பத்தில் சிதறிப்போன ஒரு சடும் நிலையில் இருக்கச் செய்துள்ளதாக அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனுதிபதி தமது முறையீட்டை அடுத்து மூதூருக்கு கூட்டுப்படைகளின் தளபதி சிறில் ரணதுங்கவை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததாகவும் திரு அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

---

### ஆஸி. வெளியுறவு மந்திரி எச்சரிக்கை

# காமன்வெல்த் சீர்குலேயும் அபாயநிலை உருவாகிறது

(லண்டன்)

தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத் தடைவிதிக்கும் விடயத்தில் ஸ்திரமான நிலையைத் தெளிவு படுத்துமாறு பிரிட்டிஷ் பிரதமமந்திரி திருமதி மாக்கிரெட் தட்சரை காமன்வெல்த் தலைமைச் செயலாளர் டாக்டர் ரம்பால் கேட்டுக் கொண்டுள்ளார். பி. பி ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில் தான் மேற்கொண்டுள்ள ஆபிரிக்கப் பயணம் பயனளிக்காது போனுல் தென்னுபிரிக்கா மீதான பொருளாதாரத் தடை பற்றிய மறு பரிசீலனை தேவைப்படலாம் என பிரிட்டிஷ் வெளி நாட்டமைச்சர் சேர் ஜெப்ரி ஹோ கூறியுள்ளார்.

இதனைச் சுட்டிக் காட்டிய டாக்டர் ரம்பால் பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் இக் கருத்தைக் கொண்டால் அது வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, 49 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ள காமன்வெல்த் அமைப்பிலிருந்து ஒவ்வொரு நாடாகப் பிரிந்து செல்ல முற்படுவது அவ்வமைப்பின் சீர் குலைவுக்குக் காரணமாகிவிடும் என்று அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் திரு. ஹெய்டன் எச்சரித்துள்ளார்.

கான்பராவில் வைத்து பிரிட்டிஷ் தூதுவரை அழைத்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள காமன் வெல்த் விளையாட்டு விழா குறித்து ஆறு முன்னரங்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் ஹராரேயில் கூடி ஆராயவுள்ளனர். இவற்றில் மூன்று நாடுகள் காமன் வெல்த்தில் அங்கத்துவம் வகிக்கின்றன.

குறிப்பிட்ட விழாவில் பங்கு பற்றுவதில்லை என நைஜீரியா, காஞ, உகண்டா, கெனியா, பஹாமா, பப்புவாநியூகினியா, மலேஷியா உட்பட ஏழுநாடுகள் அறிவித்து விட்டன.

---

### அமெரிக்கா மீண்டும்

# நெவேடா பாலைவனத்தில் அணுவாயுத பரிசோதனை

(லண்டன்)

அமெரிக்கா நெவேடா பாலைவனத்தில் மற்றெரு அணுவாயுதப் பரிசோதனையை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இச்சோதனை வெற்றியுடன் நடைபெற்றதாக எரிசக்தி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் கடந்த ஆகஸ்டில் ஒரு தரப்பாக அணுவாயுதசோதனைகளை நிறுத்திக் கொண்ட பின் அமெரிக்கா நடத்தியுள்ள பதினுன்காவது அணுவாயுத சோதனை இதுவாகும்

விரைவில் இரு தரப்பினரும் ஆயுதப் பரிகரணம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## பாரதம் வேதனை

(புதுடில்லி)

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வன்முறைகள் தொடர்வதுகுறித்து பாரதம் கவலை கொண்டுள்ளதாக பி.ரி ஐ. செய்தி ஸ்தாபனம் நேற்றுத் தெரிவித்தது.

## கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

உலகின் முதல் பெண்ணுன ஏவாள் தோன்றியது ஆசியாக் கண்டத்தில் தான் என ஆராய்ச்சியாளரின் புதிய கண்டுபிடிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

---


## பிறந்த நாள் வாழ்த்து



துஷ்யந்தன்

கந்தர்மடம், பழம்றேட்டைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயந்தி தம்பதிகளின்

செல்வப்புதல்வன்

துஷ்யந்தன்

தனது ஆருவது பிறந்த நாளை குதூகலமாக கொண்டாடுகிருர். இவரை அப்பா அம்மா, தம்பிமார் மற்றும் உற்றூர், உறவினர்களும் பலகலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிருர்கள்.

R/24069


---

## ஜெயவர்த்தன...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும், 'ஈரோஸ்' எனப்படும் ஈழ புரட்சிகர அமைப்பு இயக்கமுமாகும். வட இலங்கையில் அதிக பிரபல்யம் பெற்றது புலிகள் இயக்கம். அவ்வண்ணமே கிழக்கு இலங்கையிலும், தென்னிலங்கையிலும் குறிப்பிடத்தகும் அளவு தாக்கம் ஏற்படுத்தியுள்ள 'ஈரோஸ்' உறுப்பினர்கள், உயர்ந்த பலன்தரும் வகையில் வெடி மருந்துத் தொழில்நுட்பவியல் பிரயோகத்தில் விசேடித்த ஆற்றல் உடையவர்கள் ஆவர்.

தமிழரின் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜெயவர்த்தன துரந்து வரும் மூன்றாவது செயல்மார்க்கம், பலகட்சி மாநாடு கூட்டுதலாகும். இலங்கை அரசாங்கம் மிகக் கடைசியாகத் தயாராக்கியுள்ள உத்தியோகபூர்வ பிரேரணைகளை முன்வைத்தற்கு எனவே மாநாடு கூட்டப்படுகிறது. இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் மாகாண சபைகளை நிறுவுதல், அவற்றின் குறித்துரைக்கப்பட்ட பணிகளும் தத்துவங்களும்(அதிகாரங்களும்) அப்பிரேரணைகளின் கண் விபரமாக எடுத்துக் கூறப்பட்டு உள்ளன.

ஜனுதிபதி ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கையின் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இப் பலகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்குத் தீர்மானித்தது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சி இப்பிரயத்தனத்தைப் பகிஷ்கரிப்பதெனத் தீர்மானிக்கவே, அப்பட்டமான தரக்குறைவுக்கு அம்முயற்சி ஆளாயிற்று.

இவை போதாவென்று, இப் பிரேரணைகளை 'ஒரு தலைப்பட்சமாக'ச் செயற்படுத்தப்போவதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்தது. அதாவது, இந் நடைமுறையிலுள்ள மறுதரப்பினர் (தமிழர்கள்) பிரேரணைகளை ஏற்றுக்கொண்டாலென்ன, ஏற்காது நிராகரித்தால் என்ன, அதனைப் பொருட்படுத்தாதுதனது பிரேரணைகளைச் செயற்படுத்தியே தீரப்போவதாக இலங்கை அரசாங்கம் மிரட்டியுள்ளது என்பது சாலப்பொருந்தும்.

ஜெயவர்த்தன பின்பற்றி வரும்இந் நான்மார்க்க அணுகுமுறையைக் கூர்ந்து அவதானித்தால், சிறிய ஒரு தீவுநாட்டின் கருமங்கள், காரியங்களில் ஆழமாக, பயங்கரமாக, பிசகியுள்ளது என்ன என நன்கு அறியக்கூடியதாய் இருக்கும்.

(முற்றும்)

(ஒரு விசேட நிருபர்)

ஈழமுரசு

## ராணுவம் சுட்ட நால்வர் மூதூர் ஆஸ்பத்திரியில்!

(திருமலை)

மூதூர் மணல்சேனையில் இடம்பெற்ற ராணுவச் சூட்டுச் சம்பவத்தில் காயமுற்ற நால்வர் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். க. தங்கப்பிள்ளை (60), அ. அழகுதுரை (48), அருளம்பலம் (55), ஆ. சபாபதிப்பிள்ளை (65) ஆகியோரே காயமுற்றவர்களாவர். இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுடன் சுடப்பட்ட அழகுதுரை சத்தியசீலன் என்ற பத்து வயதுச் சிறுவன் வீடொன்றுக்குள் வைத்து ராணுவத்தால் எரித்துக் கொல்லப்பட்டதாக காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

# மாகாணசபையை எதிர்த்தும், தமிழர் படுகொலைகளைக் கண்டித்தும் ஊர்வலம்

அரசின் புதிய மாகாணசபைத் திட்டத்தைக் கண்டித்தும், அடம்பன், மூதூர், நெடுங்கேணி ஆகிய இடங்களில் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம், கண்டனப் பொதுக்கூட்டம் ஆகியவற்றை நடத்தினுர்கள்.

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு வகுப்புக்களைப் பகிஷ்கரித்த மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து ஊர்வலமாகப்புறப்பட்டு ராமநாதன்வீதி, பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி, பலாலி வீதியூடாக மீண்டும் பல்கலைக்கழகம் சென்றடைந்தார்கள்.

'தமிழீழ மக்களே மாகாணசபையை நிராகரிப்போம்', 'வடக்கு கிழக்கு இணையாத தீர்வு தமிழ் பேசும் இனத்தின் நிரந்தர அழிவு' 'அமெரிக்காவுக்கு எதிராக இந்தியாவைப் பலப்படுத்துவோம்; எமது ஏழை மக்களின் விடுதலைக்காக இந்தியாவை நெருக்குவோம்' போன்ற பல்வேறு சுலோகங்கள் ஊர்வலத்தில் காணப்பட்டன.

ஊர்வலத்தின் பின்னர் கண்டனப் பொதுக்கூட்டமும், சமீபத்திய தாக்குதல்களில் மரண மாணவர்களுக்கு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது நண்பகல் பதினெரு மணியின் பின்னர் மாணவர்கள் மீண்டும் விரிவுரைகளுக்கு சென்ருர்கள்.

## பூநகரி சம்பவங்கள் பற்றி அமிர்தலிங்கத்திடம் புகார்

பூநகரியில் பள்ளிக்குடாப் பகுதியில் மீனவர்கள்மீது இராணுவத்தினர் மேற்கொண்டது 'பாக்கிப்பிரயோகம்குறித்து கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் பூநகரி பிரஜைகள் குழுவினர் தொலைபேசிமூலம்முறையிட்டுள்ளனர்

இப்பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினரினுல் கைதுசெய்யடபட்டதின் பின் காணுமல் போனவர்கள் பற்றியும் திரு. அமிர்தலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பூநகரிப்பகுதியில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்வது குறித்தும் பிரஜைகள் குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு இவை குறித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளும்படியும் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது

### மாகாணசபை...

பிரதமர் பிரேமதாஸ தலைமையிலான குழுமூன்று ஆலோசனைகளை முனவைத்துள்ளது. ஒன்பது முதலமைச்சர்கள் வருடாந்த மகாநாடு நடத்துவது, ஜனுதிபதி மூலம் முதலமைச்சர்களை இணைய வைப்பது, மாகாண சபைகளின் ஆலோசனையின் பேரில் இணைப்புக் கூட்டங்களை நடத்துவது ஆகியன மூன்று ஆலோசனைகளாகும்.

முதலமைச்சர்களின் ஆலோசனை பெருமல் ஜனுதிபதி கவர்னர்மாரை நியமிக்கவும் குழுக்கள் சிபார்சு செய்துள்ளன.

தமிழை அரசாங்க மொழியாக்கவும், மாகாணங்கள் ரீதியாக அப்பீல் நீதிமன்றங்களை அமைக்கவும் கூட இங்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

### விஜே...

மக்கள் கட்சி பொதுச் செயலாளர் திரு. விஜேகுமாரணதுங்கா எதிர்ப்புத் தெரிவித்தார்.

### பாஸ்...

வும் ஏற்ருத வெற்று லொறிகளுக்கும் 'பாஸ்' நடைமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நேற்றிரவு கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

## நெடுங்கேணியில் ஐவரை ராணுவம் கைதுசெய்தது

(வவுனியா)

நெடுங்கேணியில் நேற்றுமுன் தினம் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதலின் போது ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எஸ். கிருஷ்ணதாசன் (வயது 21), ஏ. தாமோதரம்பிள்ளை (வயது 66), அவரது மகள் தா. சரஸ்வதி (வயது 26) புஷ்பராஜா (வயது 25), ஜெகன் (வயது 20) ஆகியோரே மேற்படி ஐவருமாவர்.

இதனைத்தவிர நெடுங்கேணி மகாவித்தியாலய பதில் அதிபர் திரு. எஸ் சிவராமகிருஷ்ணன், நெடுங்கேணி கிராமசேவகர் திரு. சிதம்பரப்பிள்ளை, விசேட சேவை உத்தியோகஸ்தர்களான தர்மபாலன், குகராஜா ஆகியோரை இராணுவ முகாமுக்கு வருமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## கந்தளாய் சூரியவேவாவில் பத்துப் பேர் சுட்டுக்கொலை

(திருமலை)

கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனப் பகுதியிலுள்ள சூரிய வேவா என்ற கிராமத்திறகுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த இனந்தெரியாத இளைஞர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பத்துப்பேர் கொல்லபபட்டார்கள்.

இரவு 8.30 மணியளவிலேயே இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்து இபபகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட பத்துப் பேரும் ப. முஸ்தபா (43), நிமால் பெரேரா (20), காமினி (20), பாறூக் (26), சாலிசிங்கோ (58), வீ. ஜீ. பெரேரா (65), பி. பீரிசிங்க (40), வீ. எச். விமால் (25), அப்துல் பரீத் (17), ஹேரத் (18) என அடையாளங் காணப்பட்டுள்ளது.

### கண்ணிவெடியில்...

வத்தினரின் மீது பெரியகுளம் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலில் பல இராணுவததினர் கொல்லப்படடனர்.

இத் தாக்குதல்களின் போது வீர மரணமடைந்த சசி, ராஜ்குமார் ஆகியோருக்கு எமது வீர வணககத்தை தெரிவித்துக் கொள்கின்ருேம்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஏழு சடலங்கள்...

சேர்ந்த கந்தன் தனம், அளம்பிலைச் சேர்ந்த முத்துக்குமாரு கணேஸ்வரி, முள்ளியவளையைச் சேர்ந்த என். தட்சணுமூர்த்தி ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரபபட்ட பத்துப்பேரில் இருவர் மரணமாகினர். ஒருவர் ராஸிக் (சிலாபம்) எனமு மீன் வியாபாரி. மற்றவர் வேலாயுதம் ஜோதிபாலன் (25) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

### ஜனுதிபதி...

இதனைப்பற்றி இப்போதுதான் முதற்தடவையாகத் தாம் கேள்வியுறுவதாக அவர் தெரிவித்தாராம்.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஆலோசனைகளையிட்டு தங்கள் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் காணபபடவில்லையென்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

### சாரதியின்...

வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தவர்கள் மீது ஹெலிகப்டரால் குண்டு வீசப்பட்டபோது இறந்த பஸ்சாரதியான இமானுவேல் என்பவரின் சடலம் எரிந்த நிலையில் நேற்றுயாழ்ப்பாணம்கொண்டு வரபபட்டு அவரது சொந்த ஊரில் அடக்கம் செய்யப்பட்டது.

## ஈ.பி.ஆர்.எல்.எப். வீரர் நீக்கம்

இயக்கத்தின் பிரதான கட்டுப்பாட்டு விதிகளை மீறியமைக்காக திருமலையை சேர்ந்த அருள் என்பவர் தமது அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

ஒழுக்கம், கட்டுப்பாடு, சுயதியாக உணர்வு, மக்களுடன் பண்பாக நடந்து கொள்வது, மக்களை மதிப்பது இவற்றை மீறும் ஒருவர் போராளியாக கருதப்பட தகுதியற்றவர். இவ்வாருன நபர்களை விடுதலை அமைப்பில் தொடர்ந்து அனுமதிப்பது நாம் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என மேற்படி இயக்கத்திலை் இது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார வாரம்

அச்சுவேலி வடக்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தில் சுகாதார வாரத்தைமுன்னிட்டு 14ம் திகதி காலை 35 வயதிற்கு மேற்பட்ட பலருக்கு இரத்தமுத்தமும், சலப் பரிசோதனையும் நடாத்தப்பட்டது. அதில் தொண்டர்களும் அப்பகுதி மருத்துவ மாதுவும் பங்கு கொண்டார்கள்.

## பெரேரா தேடப்படுகிருர்

(திருமலை)

நேற்று முன்தினம் இரவு அனுராதபுரம் சந்தி என்ற இடத்தில் எல். எம். பிரேமரத்தின (22) என்பவவர் ஊர்காவல்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வின்சன்ற் பெரேரா என்ற ஊர்காவற்படை வீரர் தேடப்பட்டு வருகிருர்.

## இன்று

(புலோலி)

தென்புலோலி அருள்மிகு உபய கதிர்காம வேட்டைத் திருவிழா இன்று 19-ம் திகதி நடைபெறுகின்றது.

## கூட்டம்

யாழ். வர்த்தகர் சங்கப் பொதுச்சபைக் கூட்டம் இன்று பிற்பகல் இரண்டு முப்பது மணிக்கு பாரதிபாஷா வித்தியாலயத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் எஸ். வி. முருகேசு ஸ்தாபனம், மற்றும் ஸ்தாபனங்களின் லொறி கடத்தல் சம்பவங்கள் பற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## குடிநீருக்கு பஞ்சம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் குடிதண்ணீர்ப் பஞ்சம் மக்களை வாட்டுகிறது. தினந்தோறும் குடிதண்ணீர் பெறுவதற்காக மக்கள் பல மைல் தூரம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள கிணறுகள், குளங்களில் எல்லாம் நீர் பற்றி வரண்டுவிட்டது. கால்நடைகள் குடிக்க நீரின்றித் தவிக்கின்றன. சலவைத் தொழிலாளர்கள் சலவை செய்வதற்கு நீரின்மையால் தொழில் செய்ய முடியாது அவதியுறுகின்றனர்.

ஆனையிறவுக்கு அப்பால் செல்லும் சகல லொறி, பஸ் உரிமையாளருக்கும்

ஓர் முக்கிய அறிவித்தல்

18-07-86 அன்று யாழ். இணைப்பதிகாரியுடன் ஏற்படுத்தப்பட்ட சந்திப்பின் முடிவுகளை கலந்து ஆலோசிப்பதற்காக 19-07-86 இன்று பிற்பகல் 1 மணியளவில் யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற உள்ள கூட்டத்தில் தவருது சமுகம் கொடுக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கிருேம்.

இப்படிக்கு:
வடபிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கமும்,
யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும்.
R/24351

மரண அறிவித்தல்

திருமதி லில்லிமலர் தருமரத்தினம்

திருமதி லில்லிமலர் தருமரத்தினம் 16-07-86ல் லண்டனில் காலமானுர். இவா திரு. S. D. தருமரத்தினம் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்-தற்போதைய கணக்காளர், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பிறிம் சேவியர் (U. K.) பொபி ரவீந்திரன் (அவுஸ்திரேலியா) யோசப் தருமசீலன், கணக்காளர் (U. K.) கண்ணன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பீலிக்ஸ் சேவியர் (U. K.) ரவீந்திரன் (அவுஸ்திரேலியா) Dr. திருமதி சாந்தி தருமசீலன் (U. K.) ஆகியோரின் மாமியாரும், திருமதி நறுமலர் நவரட்னம் (இந்தியா) எட்வேட் (மாதகல) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னுரின் நலலடக்கம் லண்டனில் நடைபெறும்.

தகவல்:
தருமரத்தினம் குடும்பத்தினர்.

சண்டிலிப்பாய்.
R/24070

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 19-07-86 சனிக்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: [illegible]